பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 18உ (4—10—67) புதன் ★ வெளியூர் : புரட்டாசி 19உ (5—10—67) வியாழன் [இதழ் : 93

பட்டும் பாடம் பெறவில்லையே!

"1967 பொதுத் தேர்தல் படிப்பினையை - தோல்வியை - காங்கிரசு இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை—பாடம் பெறவில்லை; இனியும் அந்தத் தவறு தொடர்ந்தால் காங்கிரசுக்கு இருண்ட எதிர்காலம்தான் கிட்டும்"

என, அகமதாபாத்தில் தலைமையமைச்சர் இந்திரா கூறியுள்ளார்.

தாளம் தப்பிய நடனம்!

நடைமுறைக்கு ஒவ்வாத நாடகம்!

வங்காள அமைச்சரவை இன்னும் அந்தரத்தில் ஆடுகிறது!

வேடிக்கை பார்க்கிறது—'வினை'க்குக் காரணமான காங்கிரசு!

இன்று, 'முறைப்படி பதவி விலகி—அமைச்சரவையையும் கலைப்பார்' என்று எதிர்பார்க்கப்பட்ட அஜாய் முகர்ஜி, அவரது யூகத்தினையும் இன்னும் ஓரிரு நாட்களுக்கு நீட்டியிருக்கிறார்!

"குழப்பம் நீடிக்கிறது; தெளிவைக் காணோம்" என்பது, மேற்கு வங்க நிலைமையைப் பற்றிய சுருக்கமான கருத்தாக இருக்கிறது.

நம்நாடு செய்தி நோக்கு

"கம்யூனிஸ்டுகளை உள்ளடக்கிய அஜாய் முகர்ஜியின் அமைச்சரவை பதவி விலகி, மீண்டும் அவரது தலைமையிலோ, அல்லது நிலைமைகளின் திடீர் மாற்றத்தினால் வேறொருவரின் தலைமையிலோ மேற்கு வங்காளத்தில் ஒரு மாற்றம் நிகழ இருக்கிறது" என்பது மட்டும்தான் முடிந்த முடிவாக இருக்கிறது!

"அடுத்த அமைச்சரவை யாருடையதாக இருந்தாலும், அதில் கம்யூனிஸ்டுகள் இருக்கமாட்டார்கள் என்பது எவ்வளவு உறுதியோ அவ்வளவு உறுதி—வெளியேறிய கம்யூனிஸ்டுகள், வர இருக்கின்ற அமைச்சரவைக்கு ஒரு சுலபமான இயக்கத்தைக் கொடுக்கமாட்டார்கள்" என்பதும்!

அதற்கான அறிகுறிகள்—ஜோதிபாசு, அரிகிருஷ்ணகோனார் ஆகியோரின் அறிவிப்புக்களின் மூலமும், வங்காள மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சியின் அதிகாரபூர்வமான அறிக்கை ஒன்றின் மூலமும் புலப்படுகின்றன!

கம்யூனிஸ்டுகள் வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட நிலையிலும், மேற்கு வங்கத்தில் அமைய இருக்கும் புதிய அமைச்சரவை அரசியல் அமைதியைக் கொடுக்குமா என்பது சந்தேகமே!

ஏனெனில், தனிப்பட்ட பூசல்கள் காரணமாகக் காங்கிரசிலிருந்து வெளியேறிய உமாயூன் கபீர், அஜாய் முகர்ஜி போன்றவர்களை மீண்டும் காங்கிரசின் 'பிடி'க்கு அல்லது செல்வாக்குக்குக் கொண்டுவருவதும் நந்தாவின் திட்டம் உள்ளடக்கிய ஒரு கொள்கைதான்!

இருந்தாலும், தனக்கு ஆதரவினைக் கொடுக்கும் காங்கிரசுக் கட்சியில், அதுல்யா கோஷ், எந்த நிலையில்—பலத்தில்—தகுதியில் இருக்கிறார் என்பதை, அஜாய் முகர்ஜி அறிய வெகு ஆவலாக இருக்கிறார்!

இருவருக்குமுள்ள தனிப்பட்ட பகை, அத்தகைய ஆழமுடையது!

நந்தாவின் திட்டத்துக்கு ஒப்புதல் தந்துவிட்டபோதிலும், அதுல்யாவை மேற்கு வங்கக் காங்கிரசில் முக்கிய மனிதராகக் காமராசர் மதிக்க ஆரம்பித்திருப்பதை, அஜாய் முகர்ஜி உணர்ந்திருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், புதிய அமைச்சரவை அமைந்தால்—அதில் காங்கிரசு—'உறுப்பினர் அளவில் இடம் பெறுமா அல்லது ஆதரவினை மட்டும் தருமா' என்பது இன்னும் முழுமையாக விவாதிக்கப்படவில்லை!

இதற்கிடையில், 132 காங்கிரசு உறுப்பினர்கள், அஜாய் முகர்ஜியை ஆதரிப்பதற்கே மறுப்புத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது!

வெளியே அனுப்பப்படும் கம்யூனிஸ்டுகளும் சும்மா இருக்க மாட்டார்கள்!

உள்ளே வரும் அல்லது ஒதுங்கியிருந்து ஆதரவு அளிக்கும் காங்கிரசினையும் முழுமையாக நம்ப முடியவில்லை!

இந்த இக்கட்டிலிருந்து அலைமோதுகிறார், அஜாய் முகர்ஜி!

உறவாய் இருந்து பகையாய் மாறியிருக்கும் ஜோதிபாசுவும், அரிகிருஷ்ண கோனாரும், அஜாயின் நடவடிக்கைகளை, 'வரைமுறை இல்லாத 'நாடகம்'—'வெட்கங்கெட்ட வகையில் நம்பிக்கைத் துரோகம்' என்று—அமைச்சரவைத் தகுதியில் இருந்துகொண்டே—கூறியிருக்கிறார்கள்!

இதைத்தான் அனைத்திந்தியக் காங்கிரசு எதிர்பார்த்தது! அது நடந்தும்விட்டது!

அமைச்சரவைக்கு ஆட்டமும், அதன் இயக்கத்துக்குக் குழப்பமும் விளைவிப்பதுதான் நந்தா திட்டம் உள்ளடக்கிய ஒரு கொள்கை!

தெளிந்த குட்டையில் மீன் பிடிப்பது வழக்கம்—நடைமுறை!

ஆனால், குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுதான் காங்கிரசு கடைபிடிக்கும் குறுக்கு வழி அரசியல்!

எதிர்பார்த்த குழப்பம் தோன்றியிருக்கிறது!

இனி காங்கிரசு, தனது வேலைகளைத் துவக்கி முடிக்கும்;

மேற்கு வங்கம் பற்றிய ஓர் இறுதி நிலை, நாளை (அக். 5) உருவாகுமெனத் தெரிகிறது!

குடும்பக் கட்டுப்பாடு

ஆந்திரக் கிராமத்தின் சாதனை

ஐதராபாத் மாவட்டம் மெட்சல் ஊராட்சி ஒன்றிப்பைச் சேர்ந்த ஷமீர்பேட்டை என்ற கிராமத்தில், ஒரே நாளில் 323 கருத்தடை அறுவைச் சிகிச்சை நடைபெற்றிருக்கிறது; இது ஒரு பெரும் சாதனையாகும்.

இதற்குமுன் இதேமாதிரி கேரளத்தில் 310 அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன.

தென்னிந்தியவெனிஸ்!

சென்னை பெறவிருக்கும் சிறப்பு!

புதுடில்லி, அக். 4—

"சென்னை நகரம் இன்னும் மூன்றே ஆண்டுகளில் இந்தியாவின் மிக அழகிய நகரங்களில் ஒன்றாக விளங்கும்; 'தென்னிந்தியாவின் வெனிஸ்' என்று புகழப்படும்" என்று, சென்னை முன்னாள் மேயர் திரு. வி.முனுசாமி கூறினார்.

ஆள் தூக்கிச் சட்டம்—கேரளத்தில் அமுலாகிறது

துவக்கக் காலம் முதல் தடுப்புக் காவல் சட்டத்தினைக் கடுமையாகக் கண்டித்து வந்திருக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி, தனது தலைமையில் உள்ள கேரள ஆட்சியில் அதனை இப்போது முதன் முதலாகப் பயன்படுத்தி யிருக்கிறது!

கடந்த சில வாரங்களாக வேலை நிறுத்தம் போன்ற ஒத்துழையாமை முறைகளில் ஈடுபட்டு வரும் கேரள மாநில மின் சாரத்துறை பொறியாளர்களின் தலைவர்கள் 9-பேர், திங்களன்றும், செவ்வாயன்றும் இச்சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஐக்கிய முன்னணியினரின் ஆட்சிக் காலத்தில்—கேரளத்தில்—தடுப்புக் காவல் சட்டம் அமுலாவது இதுவே முதல் முறையாகும்!

"முறையற்ற வழிகளில் வேலை நிறுத்தம் செய்துவரும் பொறியாளர்களுக்கு, மக்கள் எவ்விதக் கருணையும் காட்டக்கூடாது" என முதலமைச்சர் நம்பூதிரிபாடு கூறியிருக்கிறார்.

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளராக முரசொலி மாறன் போட்டியிடுகிறார்.

ஆள் வருகிறார் பின்னே—செய்தி வருகிறது முன்னே!

"'நீங்கள் போட்டி போடுவீர்களா?' என்று கேட்டதற்கு, பாட்டீல், 'இல்லை' என்று பதில் கூறினார்.

"தொடர்ந்து பதவியில் இருக்கக் காமராசர் ஆவலாக இல்லை என்றாலும், 'காமராசரைவிடச் சிறந்தவர் யாராவது இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும்.'"

—நாளிதழ் ஒன்றின் (4—10—67) செய்தி

"முன்னாள் மத்திய அமைச்சர் எஸ். கே. பாட்டீல், இன்று (அக். 4) இரவு 9 மணிக்குச் சென்னை வருகிறார்."

—அதே நாளிதழின் மற்றொரு செய்தி

பாட்டீலின் பார்வையில், காமராசர் ஏன் இப்படித் 'திடீ'ரென்று உயர்ந்துவிட்டார் என்பதை, 'திடீ'ரென்று படிப்பவர்கள் உணர்ந்துகொள்வதற்காகவே மேற்கண்ட இரண்டு செய்திகளும் தொகுத்துத்தரப்பட்டிருக்கின்றன!

—'பாக்சர்'

(3-ம் பத்தியின் தொடர்ச்சி)

அமைச்சர் மதியழகன் திட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசியதாவது :—

காந்தியார் பிறந்த இந்த நன்னாளில் அறிஞர் அண்ணா கட்டளைக்கேற்ப இத்திட்டத்தைத் துவக்கிவைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்போது இத்திட்டத்தின்படி ஆயிரம் பேருக்கு மலிவு விலையில் பால் கிடைக்கும். அடுத்த ஆண்டு ஏழாயிரம் குடும்பங்களுக்குக் கிடைக்கும்."

ஏழைகட்கு மலிவு விலையில் பால் வழங்கு திட்டம்

மதியழகன் துவக்கிவைத்தார்

மதுரை, அக். 4—

ஏழை மக்களுக்கு மலிவு விலையில் பால் வழங்கும் திட்டத்தை, உணவமைச்சர் திரு. மதியழகன் காந்தியார் பிறந்த நாளன்று மதுரையில் துவக்கிவைத்தார்.

இத்திட்டத்தின்படி, மதுரையில் உள்ள பால் பண்ணையின் மூலம் ஒரு லிட்டர் 88 காசு விதம் (குறைந்த வருமானம் உள்ளவர்கட்கு மட்டும்) பால் வழங்கப்படும். இதேபோல் முன்பு லிட்டர் 98 காசுக்கு விற்கப்பட்டு வந்தது.

சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவிந்தராசன் விழாவுக்குத் தலைமைவகித்தார். மாநிலப் பால் துறை ஆணையர் திரு. வேதநாராயணன் அனைவரையும் வரவேற்றார். மதுரை பால் பண்ணை அதிகாரி நன்றி நவின்றார்.

(தொடர்ச்சி 5-ம் பத்தி பார்க்க)

காந்தி பிறந்த நாளில் காங்கிரசாரின் 'திருவிளையாடல்'

'ஊர்வலம்' என்ற பெயரால் மதுரையில் வெறியாட்டம்!

மதுரை, அக். 4—

காந்தி பிறந்த நாளான அக். 2-ஆம் நாள், 'காந்தி சீடர்கள்' தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்!

'காந்தி பிறந்த நாள் ஊர்வலம்' என்ற பெயரில் ஊர்வலம் சென்ற காங்கிரசுக்காரர்கள், வழியில், கழகச் சுவரொட்டிகளைக் கிழித்தெறிவதிலும், கழகத்தவர் கடைகள்மீது கல்லெறிவதிலும் ஈடுபட்டு வன்செயல்களைப் புரிந்திருக்கின்றனர்.

கழகப் படிப்பகம் ஒன்றின் மீதும், கழகத்தவர் தங்கியிருந்த அருணா லாட்ஜ் விடுதி மீதும் மற்றொரு கழகத் தோழர் கடை மீதும் கற்களையும் சாணியையும் வீசிக் கலவரம் செய்தனர். மேலும், கழகத்தவரை கண்டபடி ஏசியும், பேசியும் கீழ்த்தரமாக நடந்துகொண்டனர்.

இந்த ஊர்வலத்தை நகரக் காங்கிரசுத் தலைவர் என். எம். ஆர். சுப்பராமனும், மாவட்டத்தின் முக்கிய காங்கிரசுக்காரர்களான ஏ. சிதம்பர முதலியார், சிதம்பர பாரதி, பெருமாள் முதலியவர்களும் முன்னிருந்து நடத்தினர் என்பதும் நினைவில் கொள்ளத் தக்கது.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 18 (4—10—67) புதன்

உத்தமர் நினைவு விழாவும் முதலமைச்சர் முறையீடும்

உலக உத்தமர் காந்தியார் அவர்களின் தொண்ணூற்றெட்டாவது பிறந்த நாளின் தொடர்பாக—இக்கிழமை அப்புனிதரின் பெயரால்—இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது. அடுத்து, அத்தூயவரின் நூற்றாண்டு விழாவை விரிவான முறையிலும் ஏற்ற வகையிலும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள், இப்பொழுதே மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், உத்தமரின் விழாவைக் கொண்டாட உருவாக்கப்பட்டிருக்கின்ற 'குழுவின் தலைவர்' என்ற நிலையிலும், 'முதலமைச்சர்' என்ற நிலையிலும் நின்று அறிஞர் அண்ணா அவர்கள், தமது கருத்தை அறிக்கை வாயிலாக விளக்கிக் கூறியிருக்கின்றார். இதுவுமன்றி, வானொலியிலும் அறிஞர் அண்ணா அவர்கள், காந்தியார் அவர்கள் பெற்றிருந்த தூய்மையான உள்ளத்தையும், அத்தூய்மையான உள்ளத்தில் நிரம்பி வழிந்துகொண்டிருந்த உயர்ந்த பண்புகளையும், பொதுவாக உலக மக்களுக்கும் குறிப்பாக இந்த நாட்டு மக்களுக்கும் அப்பெரியவர் ஆற்றியுள்ள அரும்பணிகளையும், மனித சமுதாயம் சிறந்து விளங்க அப்புனிதர் வகுத்தளித்திருக்கின்ற சிறந்த இலட்சியங்களையும், தெள்ளத் தெளியச் சுட்டிக்காட்டி, தம் வாழ்க்கையில் அவர் நடந்து சென்ற பாதையில் நாமும் நடந்து, 'புதியதோர் சமுதாயத்தைக் காண்போம் வாரீர்' எனத் தமிழ் மக்களை அன்புடனும் பணிவுடனும் வேண்டிக்கொண்டுள்ளார்.

மறைந்த உத்தமர் காந்தியார், இந்தியாவிற்கு அரசியல் விடுதலையைத் தேடித்தந்தவராக மட்டுமே இல்லை; தீண்டாமையை ஒழிப்பதிலும், சாதி பேதங்களைக் கருவறுத்து, உயர்வு – தாழ்வுக்கு இடமில்லாத புதியதோர் சமுதாயத்தைக் காண்பதிலும்—தீவிரவாதிகள் கூற்றுக்கும், மாறா மனத்தினரின் பிடிவாதத்துக்கும் இடையில்—செயல்படுத்தத் தக்க ஒரு வழியைப் பின்பற்றி, குறிப்பிடத் தகுந்த அளவுக்கு வெற்றியும் கண்டார்.

தீண்டாமை ஒழிப்பில் அவர் காட்டிய ஆர்வத்தில் கொஞ்சமும் குறையாத அளவுக்கு மது ஒழிப்பிலும் அவர் மிதமிஞ்சிய தீவிரவாதியாக இருந்திருக்கின்றார்.

அவர், 'அரசியல் துறையில் மட்டுமே உரிமை இருந்தால் போதும்' எனப் பாடுபட்டார் இல்லை; 'சமுதாயத்திலும் ஒத்த உரிமை அனைவருக்கும் இருத்தல் வேண்டும்' என்றுதான் அவர், அந்த உரிமைக்குப் பொருள் கொண்டிருந்தார்; அதை அவர் வலியுறுத்தியும் வந்தார்.

ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியை அவர் வெறுத்ததுடன், அதை வெளியேற்றவும் விரும்பினாரே அல்லாது ஆங்கிலேயர்களை அவர் வெறுத்திடவில்லை; அவர்களையும், இந்த நாட்டு மக்களுடன் ஒத்த நிலையிலேயே மதித்தார்!

பகைவனிடத்தும் அவர் அன்பு செலுத்தினார்! கொள்கை மாறுபட்டவர்களின், கொள்கையைத்தான் குறையுடையது எனக் குறிப்பிட்டாரே அல்லாது, அக்கொள்கையைக் கொண்டிருப்பவர்கள்மீது சினம் கொண்டதில்லை!

மற்றவர்கள் செய்யும் தவறுகளுக்கும் குற்றங்களுக்கும் தன்னைத்தானே வருத்திக்கொண்டு, தவறிழைப்பவர்களின் உள்ளத்தைத் துப்புரவாக்க முனைந்தவர் அவர்!

உலக உத்தமர் காந்தியார் அவர்கள் தோன்றுவதற்கு முன்னர், மனித சமுதாய உரிமைக்காக வழிகண்டோர்—விடுதலைப் போரின் முன்னோடிகளாக இருந்தோர் அனைவரும், 'பெற விரும்புகின்ற இலட்சியம் தூய்மையானதாக இருந்திட்டால் மட்டும் போதும்' என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்—கடைபிடித்தொழுகவும் செய்தனர்.

இக்கோட்பாட்டிலிருந்து உத்தமர் காந்தியார் மாறுபட்டார்; 'இது, தவறானது' என்றும் விளக்கமுறைத்தார் அப்பெரியவர்!

தமக்கு முன்பிருந்த விடுதலை வீரர்கள், 'நியாயமானது—தேவையானது' எனத் தீர்மானித்துச் செயல்படுத்தி வெற்றியும் கண்ட—'இலட்சியம் தூய்மையானதாக இருந்தால் மட்டும் போதும்' என்ற அக்கோட்பாட்டை, 'தவறானது' என்றும், 'அழிவைத் தரக்கூடியது' என்றும் குறை கூறிய அளவுடன் உத்தமர் காந்தியார் இருந்துவிடவில்லை. அதற்கு, மாற்று முறையையும் மருவற வகுத்தளித்தார். தாம் வகுத்தளிந்த அப்புதிய ஏற்பாட்டை படித்துப் படித்து விவாதிப்பதற்கு மட்டுமே உரிய ஒன்றாக ஆக்கிவிடவில்லை காந்தியார்!

தாம் உருவாக்கிய அச்செயல் முறைத் தத்துவத்தை—நனி சிறந்த கோட்பாட்டை—தாமே துணிந்து செயல்படுத்தி, உலகத்தவர் வியக்கத்தக்க மகத்தான வெற்றியும் கண்டார் அப்புனிதர்! தாம் கண்ட அச்செயல்முறைத் தத்துவத்தின் மாபெரும் ஆற்றலை, தாம் மேற்கொண்ட அரும் முயற்சியினாலேயே உலகறியச் செய்தார்!

"அடைய விரும்புகின்ற இலட்சியம் தூய்மையானதாகவும், புனிதமானதாகவும் இருந்தால் மட்டும் போதாது; அந்த இலட்சியத்தை அடைவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழியும் முறையும் தூய்மையானதாகவும், புனிதமானதாகவும் இருத்தல் இன்றியமையாததாகும்" என்பதுதான், உலக உத்தமர் காந்தியார் உருவாக்கிய புதிய கோட்பாடாகும். இவ்வுயர்ந்த கோட்பாட்டை உள்ளடக்கமாகக் கொண்டதுதான், அவ்வுத்தமரின் அறப்போர்!

அவ்வறப்போரை, உலக நல்லறிவாளர்கள் அனைவரும் போற்றிப் பாராட்டுகின்றனர். கொடுமையை எதிர்த்துப் போரிட விழைகின்ற விடுதலை விரும்பிகள் எவராயினும், இன்றைய உலகில், இந்த அறப்போரைத்தான் மேற்கொள்ளுகின்றனர்.

உத்தமர் காந்தியார் மறைந்துவிட்டார். அவர் உருவாக்கி, மனித குலத்துக்குக் கிடைத்தற்கரிய பெரும் பரிசாகக் கொடுத்துள்ள இந்த அறப்போர், இன்று மனித குலத்தின் பொதுச்செல்வமாக இருந்துவருகிறது.

இக்கிழமையில், மறைந்த உத்தமரை நினைந்து விழா கொண்டாடுகின்ற அனைவரும் இவ்வறப்போரையும், இவ்வறப்போரில் உள்ளடக்கமாக இருக்கின்ற விழுமிய தத்துவத்தையும் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

அத்தத்துவம் நீண்டு நிலைத்திடவும், அத்தத்துவத்தால் நமது மக்கள் பெறக்கூடிய நற்பயனை இடையறாது பெற்று வரவும்—இந்தச் சூழ்நிலையில்—நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டியது என்ன என்பதை, நமது முதலமைச்சர் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கின்றார். முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க நாம் செம்மையாகச் செயல்பட்டு, உத்தமரின் கனவை நனவாக்குவோமாக!

"உழைப்பின் சிறப்பையும், பெருமையையும் வாழ்நாளெல்லாம் நமக்கு அறிவுறுத்திவந்த உத்தமப் பெரியாரின் பிறந்த நாளினைக் கொண்டாடும் நாம், 'எத்தகைய தொழிலிலும் வேற்றுமை ஏதுமில்லை" என்பதைத் தெரிந்து நமது பங்கினைச் செம்மையாகச் செய்யத் துவங்கவேண்டும்.

"அவரது நினைவிற்கென, இவ்வாண்டு அவரது 98-வது பிறந்த நாளினை உற்பத்திப் பெருக்க விழாவாகக் கொண்டாட முடிவு மேற்கொண்டுள்ளோம். உற்பத்திப் பெருக்கத்தில் பங்குகொள்ள அனைவரும் வேற்றுமைகளையும், பேதங்களையும், உயர்வு தாழ்வினையும் உதறித் தள்ளியெறிந்து உழைக்கப் புறப்பட வேண்டும்.

"எத்தகைய உழைப்பிலும் கேவலமோ, தாழ்வோ இல்லையென உணர்ந்து உழைக்கத் தொடங்க வேண்டும்.

"விவசாயப் பெருமக்கள்—நகர்ப்புறத்து மாந்தர்—மகளிர்—மாணவர்கள் – தொழிலாளர்கள் — மற்றெல்லோரும் இப்பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு, 'உழைக்கப் புறப்படுவீர்' எனப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்."

—கா. க.

சின்ன விஷயம்

காங்கிரசுத் தேர்தல் அறிக்கையில் கம்பனுக்குச் சிலை!

காங்கிரசுக் கட்சியின் 1967-ம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையை நீங்கள் பார்த்திருப்பீர்களே—உங்களுக்கு நினைவிருக்கிறதா?—

'கம்பனுக்குச் சிலை எடுப்போம்'

என்று அதிலே ஏதாவது இருந்ததா?

நமக்கு அப்படி ஏதும் நினைவில்லை! அப்படியே இருந்தாலும், அவர்கள் ஆட்சி அமைத்திருந்தாலாவது, வாக்களித்தவர்கள் சார்பில் காங்கிரசார் பேசினால், அதில் பொருள் இருக்கும்!

உள்ளபடியே, 'எதிர்க் கட்சித் தலைவர் யார்?' என்ற பேச்சு, சென்ற பிப்ரவரி–மார்ச்சில் அடிபட்டபோது, திரு. கருத்திருமன் அவர்கள் பெயரைப் பலரும் சொல்லிக் கொண்டிருந்த போது, 'பரவாயில்லை' என்றுதான் நாமும் நினைத்தோம்—'காங்கிரசுச் சார்பில் தேர்ந்து வந்த கும்பலிலே இவர் பரவாயில்லை' என்பதால்தான்! ஆனால் போகப் போகத்தான் புரிகிறது—'அது பொன்னிருக்கும் இடமல்ல; புகழ் மணக்கும் இடமல்ல; பொய் சிரிக்கும் இடம்' என்று!

அது மட்டுமல்ல; அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக எதிரே இருப்பதாலேதான், கருத்திருமன் பேச்சிலும் கொஞ்சம் அடக்கமும், பண்பும் தெரிகிறது!

எதிர்க் கட்சித் தலைவருக்குத் தமிழிலே இருக்கும் பற்று, கம்பனுக்குச் சிலை எடுத்துவிட்டால் தணிந்துவிடும் போலும்! 'எடுப்பாரைக் கண்டால் குடம் கூத்தாடும்' என்பார்கள் பெண்கள்! அதுபோல இருக்கிறது இவர் பேச்சு!

கழகம், தமிழகத்தில் அரசு அமைத்த பிறகு தமிழ்ப் பண்பின் வளர்ச்சி—தமிழ் மொழியின் சிறப்புத் துலக்கல்—என்று, பல துணை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது!

அதுமட்டுமல்ல; 1968-ல் நடைபெற இருக்கும் உலகத் தமிழர் பேரரங்கை ஒட்டியும் சில செயல்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில், கண்ணகிக்கும் — பாரதிக்கும்—பாரதிதாசனுக்கும் சிலை எடுப்பதென்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சும்மா இருப்பாரா கருத்திருமன்?—வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டார்—'கவிஞருக்கெல்லாம் சிறப்புச் செய்வதானால், ஏன் 'கம்பன் என்ன ஆனான்?' என்று வழக்குரைத்துக் கிளம்பிவிட்டார்!

சூதன் கொல்லையில் மாடு மேய்ந்து கொண்டிருப்பது போலத் தமிழ்ப் பண்பை மெல்ல அரித்துக் கொண்டு காங்கிரசு ஆட்சி, 8-மாதம் முந்திவரை ஆண்டுகொண்டிருந்ததே—அப்போது சும்மா இருந்த இந்தச் சுயகாரியப் புலிகளுக்கு இப்போதுதான் சொரணை வந்திருக்கிறது! கம்பனுக்கு சிலை வேண்டுமாம்!

வெறுங் கவிஞர்களுக்கு மட்டும்தான் சிலை என்றால், அணியணியாய்த் தமிழ்க் குலத்துக் கவிஞரெல்லாம் வருவார்களே!

கவிஞருக்கு மட்டுமே சிலை என்றால் கண்ணகிக்குச் சிலை எடுப்பானேன்? ஆக, காரணம் வேறொன்றுண்டு! அதையுந்தான் செய்தியாளரிடம் அண்ணா அவர்கள் சொன்னார்களே!

"ஆண்மையையும் எதிர்த்து நீதிக்கு நேர் நின்று வாதிட்ட பெண்மைக்குச் சிறப்புச் செய்ய கண்ணகிக்குச் சிலை; மற்றச் சிலைகளெல்லாம் ஒவ்வொரு காலக்கட்டத்தை விளக்கிடும் வண்ணம் அமைகின்றன" என்றாரே—இன்னமா புரியவில்லை?

"செம்பரம்பாக்கத்தான் வெறும் பேர்தான் பெற்றான்; மாங்காட்டான்தான் நீரைப் பெற்றான்" என்று செங்கற்பட்டு மாவட்டத்தில் சொல்லுவார்கள்—அதைப்போலப் பேசுகிறார் கருத்திருமன்!

'மீண்டுமொரு புதுவாழ்வு தமிழுக்கு வேண்டும்' என்று கழகம் போராடிவருவதை, மொழி வெறி—பிராந்திய வெறி—என்று ஒருபுறம் சாடிக் கொண்டே, எந்த முகத்தோடே கம்பனுக்குச் சிலை கேட்கிறார்களோ தெரியவில்லை!

அதிலே 'அரசியல்' வேறு! காங்கிரசுக்கு வாக்களித்த இலட்சக்கணக்கான வாக்காளர்கள் பேரால் கேட்கிறாராம் அவர்—கம்பனுக்குச் சிலை வைக்கும்படி! கம்பனுக்குச் சிலை எடுப்பதாகச் சொல்லித்தான் வாக்குப் பெற்றார்களோ?

இப்போது காங்கிரசுக்காரர்கள் புதிதாக உருவாக்கி வரும் உதவாக்கறை மரபுப்படி, தேசிய வழக்கறிஞர்—தேசிய மாணவர்—தேசிய ஆசிரியர்கள்போல, கம்பர், தேசிய கவிஞர் போலும்!

அப்படியானால், கழகம் சிலை எடுக்க முடிவு செய்த பாரதியும், கண்ணகியும், வள்ளுவரும், பிறரும் கழகத்துக்காரர்கள்—அப்படித்தானே!

வள்ளுவரை கழகத்து அணியில் சேர்த்தாரே, கருத்திருமன்—அவருக்கு நன்றி!

ஆனால், இதிலே அரசியலைச் சேர்க்கிறாரே—அதிலேதான் அவருடைய அறிவுடைமையைச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது!

பாவம்! அரசியலில், 'அரசியல் செய்ய' அவருக்கு இடம் வைக்கவில்லை கழக அரசு! அதனால், 'இதிலாவது விளையாடலாம்' என்று பார்க்கிறார்! பார்க்கட்டும்! நாமும் அந்த அழகைப் பார்க்கலாம்!

—பூரணன்

தமிழருக்கு இழிவுதரும் 'டால்மியாபுரம்' ஒழியும்

'கல்லக்குடி' எனப் பெயர்சூட்ட அறிஞர் அண்ணா முயற்சி

புதுடில்லி, அக். 1—

'டால்மியாபுரம்' என்றிருக்கும் இரயில்நிலையத்தின் பெயரை, 'கல்லக்குடி' என்று மாற்ற வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கை என்றும், இதனை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்றும் அறிஞர் அண்ணா அவர்கள், இரயில்வேத்துறையமைச்சர் திரு. பூனச்சாவிடம் வற்புறுத்தியுள்ளார்.

மாநில அரசின் உள்துறையமைச்சகத்திடமிருந்து இது தொடர்பாகத் தகவல்கள் கோரப்பட்டிருப்பதாகவும், விவரம் கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இரயில்வே அமைச்சர் பூனச்சா கூறினார்.

'டால்மியாபுரம்' என்ற பெயரை நீக்கிக் 'கல்லக்குடி' என்று வைக்குமாறு கோரி, 1953-ல் திராவிட முன்னேற்றக் கழகம் அறப்போர் நடத்தியது தெரிந்ததே!

தெரிகிறது, தெரிகிறது--யாரென்று!

'நான் யார் தெரியுமா?' என்று கேட்கிறார்கள் சில மந்திரிகள்!

'என்னைத் தெரியாதா உங்களுக்கு? நான் யார் தெரியுமா? உங்கள் ஆட்சியில் வாழ்கின்ற ஒரு பிரஜை!' என்று, தேனாம்பேட்டையில் நடந்த தியாகராயநகர் தொகுதிக் காங்கிரசுக் கூட்டத்தில் காமராசர் பேசியிருக்கிறார்!

யாரை நோவது?—இப்படிப்பட்ட பேச்சை நேரில் இருந்து கேட்கக் கொடுத்து வைக்கவில்லை!

'நான் யார் தெரியுமா?' என்று கேட்ட காமராசர், 'பதிலும் விளக்கமும் தருவார்' என்றுவது அவர்கள் கொஞ்சம் முன்கூட்டிக் கணக்குப் போட்டிருக்கலாம்!

என்ன அவையடக்கம் போங்கள்! சங்க காலப் புலவர்கள் என்கிறார்களே—அவர்களெல்லாம் பிச்சை வாங்க வேண்டும் இவரிடம்!

இருக்கின்ற பதவியைச் சொல்லியிருக்க வேண்டாம்!

இருந்த பதவியையும் கூறியிருக்க வேண்டாம்!

ஊரைத் தெரிவித்திருக்க வேண்டாம்!

உற்றவரை — பெற்றவரை அறிவித்திருக்க வேண்டாம்!

என்ன அவையடக்கம்! பெயரைக்கூடச் சொல்லவில்லை பார்த்தீர்களா?

'பிரஜை' என்று மட்டுமே சொல்லியிருக்கிறார்!

ஒருவேளை, அது மட்டும் தான் 'நிலைத்தது'—இந்த அரசியலில் 'சாசுவதமானது' என்று தத்துவ ரீதியில் உணர்ந்திருப்பதனால், அத்தகைய போக்கில் காமராசர், அவையடக்கத்தினைக் காட்டியிருக்க வேண்டும்!

அல்லது பெட்ரண்ட் ரசல் அதிகமாக வலியுறுத்தியிருக்கும் 'ஒருலகம்'—'உலகக் குடிமகன்' போன்ற கருத்துக்களை காமராசர் கிரகித்துக் கொண்டிருக்க வேண்டும்.

இல்லையென்றால், இப்படி, 'பரந்த' பொருளில் அடக்க உணர்ச்சியினைக் காட்டியிருக்கமாட்டார்!

ஆசைகளை வெறுத்த நிலையில்தானே மனிதனுக்கு அடக்க உணர்ச்சியும், பரம்பொருளின் நினைவும் வருவதாகக் கூறியிருக்கிறார்கள் பெரியவர்கள்!

'அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர், போயும் போயும் 'நான் ஒரு பிரஜை' என்று மட்டுமே கூறிக் கொள்வது, எவ்வளவு தூரம் அரசியலில் ஆசாபாசங்களை வெறுத்த நிலையைக் காட்டுகிறது!

இந்த 'நான்' என்ற வார்த்தைக்கே ஒரு சரித்திர முக்கியத்துவம் உண்டு! ஒருவேளை, காமராசருக்கும் தெரிந்திருக்க நியாயமுண்டு! ஏனெனில், அதனை அனைவருமே அடிக்கடிக் கூறுவதுண்டு!

"அரசு — அது நானே" 'State--I am The State' என்று பிரான்சை ஆண்ட பதினான்காம் லூயி மன்னன் கூறினான்!

இது குடியரசுக் காலம் அல்லவா? எனவே,

'பிரஜை---அது நானே'

என்று கூறிக்கொள்கிறார் நமது காமராசர்!

கீதையைப் போதிக்கும் போது கிருஷ்ண பரமாத்மா —ஒவ்வொன்றையும சொல்லிச் சொல்லி—'அனைத்தும் நானே' என்று அர்ச்சுனனிடம் கூறினாராம்!

பதினான்காம் லூயி மன்னன், 'அரசு—அது நானே' என்றிருக்கிறான்!

இவை எல்லாம், 'ஆண்டவர்'களின் நிலை; அதாவது, கடவுள், மன்னன் ஆகியோருக்குப் பொருந்தும்!

அரசே அரசனாக இருக்கலாம் சர்வாதிகாரத்தில்!

'அனைத்தும் அவரே' எனலாம் தெய்வீகத்தில்!

மக்களாட்சியில் காமராசரும் ஒரு பிரஜையே தவிர, காமராசர் மட்டுமே ஒரு பிரஜை இல்லை!

★ 'ஒரு முன்னாள் முதலமைச்சர்' என்றால், அவர் மட்டுமே!

★ 'தற்போதைய காங்கிரசுத் தலைவர்' என்றால், அவர் மட்டுமே!

★ ஆனால், 'பிரஜை' என்னும்போது, அவர் மட்டுமல்ல!

★ தமிழகத்தில் மட்டும் அவருடன் 3½ கோடி பேர்!

★ இந்தியாவில் அவரைப் போல் 50 கோடி மக்கள்!

இது நிலை. இதில், எந்த அடிப்படையில், 'நான் யார் தெரியுமா?' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார்—'கன'மாக இருந்து காங்கிரசுத் தலைவராக இருக்கும் காமராசர்?

'நீங்கள் யார்' என்று அவரை யாரேனும் கேட்டிருந்தால்,

'முன்னாள் முதலமைச்சராக இருந்த நீங்கள்'—

'காங்கிரசுத் தலைவராக இருக்கும் நீங்கள்'—

என்ற அரசியல் தகுதியைக் காட்டித்தான் பொருத்தம் கேட்டிருப்பார்கள்!

இந்தத் தகுதியெல்லாம் வேண்டாம் என்கிறாரா?

அப்படியென்றால், அவர் ஒரு பிரஜைதான் — ஒத்துக்கொள்வோம்!

ஆனாலும், இந்த நாட்டின் ஒரே பிரஜை இல்லையே! தமிழகத்தின் ஒரே குடிமகன் இல்லையே!

பெரும் பகுதி மக்கள் ஆதரவு தரும் கழக அரசு, இந்த ஒரு 'பிரஜை'க்காக மட்டும் தனியாக எப்படி ஆட்சி நடத்தமுடியும்?

நீண்டநேரம் திரைக்குள்ளேயே இருந்து—'வந்தேனே, வந்தேனே' என்று அட்டகாசம் செய்துவிட்டு—பின் வெளியே வந்து, அடக்கத்துடன், 'மதுராபுரி மன்னனுகிய யான்' என்று அறிமுகப்படுத்திக் கொள்ளும் நாடக ராஜாவைப் போலல்லவா காமராசர், 'நான் யார் தெரியுமா?' என்று கேட்டுக் கொண்டு பதிலளித்திருக்கிறார்!

★ காங்கிரசுக்குத் தலைவர்!

★ கழக அரசைக் குறைகூற மட்டும் 'பிரஜை'!

★ தெரிகிறது, தெரிகிறது—இவர், 'அரசியலில் யார்' என்று!

—எஸ். ஆர்.

சட்டம் படித்தவர் பேச்சு!

"அரசாங்க வக்கீல்களை அரசாங்கம் நியமிக்கிறது. அதே கட்சியினர் தவறு இழைக்கும்போது, அரசாங்க வக்கீல்கள், அவர்களுடைய கட்சியினர்—குற்றவாளியும் அதே கட்சி—இதற்கு என்ன வழி?"

சட்டம் படித்துவிட்டு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் ஒருவரின் பேச்சல்ல **இது**! ஒரு முன்னாள் முதல்வரின் பொறுப்புள்ள கருத்து!

ஓர் அரசியல் கட்சியின் முக்கிய தலைவராக இருந்தவரை —தாம் பதவியிலிருந்தபோது—அரசாங்க வக்கீலாக ஆக்கிய பக்தவத்சலம்தான் இப்படிக் கேட்கிறார்!

அப்போது என்ன வழியோ—அப்போது என்ன நீதியோ—அவைதான் **இப்போதும்"** என்றுகூட ஒரே வரியில் பதிலளித்துவிடலாம், ஆனால், அவருக்கு இன்னும் சில சொல்லவோம்.

வங்காளத்தில்—உத்தரப் பிரதேசத்தில்—இன்னும் சில காங்கிரசு மாநிலங்களிலும்கூட இதுபோன்ற வழக்கம் தான் இருந்திருக்கிறது!

காங்கிரசு ஆட்சியின்போது -- அவர் நிர்வாகத்தில் -- இதற்கு ஒரு 'வழி' கண்டிருக்கலாம்; 'நீதி'யைத் தேடியிருக்கலாம்!

அவரே மேலும் பேசுகிறார்--கேட்போம்:—

"ஆளும் கட்சியினர் அரசாங்க வக்கீலாக வரும்போது, வேலியே பயிரை மேய்கிறது. இது கவலையாக இருக்கிறது."

வேலி பயிரை மேய்ந்த கதைகளை நினைத்துக்கொண்டு கவலைப்படும் போக்கில்தான் அவர் பேசியிருக்க வேண்டும்; ஏனெனில், மேய்கிற 'கதை'கள் ஏதும் இருந்தால் அதைச் சொல்லியிருக்க வேண்டும்; அப்படி ஏதும் சொல்லியிருப்பார். சொல்லாமல், இப்படிப்பட்ட வகையில் பேசுவது அவருக்கு அழகாக இருக்கலாம்;

ஆனால்

அவர் வகித்த பதவிக்கு--

படித்த சட்டத்துக்கு--

அழகாக இல்லை!

—'பாக்சர்'

சென்னை குடிசைவாழ்வோர் தீ விபத்து
நிவாரண நிதி அளிப்பு விழா

சென்னை பல்கலைக்கழகக் கலையரங்கில்

4--10--67 புதன்கிழமை மாலை 5-30 மணிக்கு

மாண்புமிகு முதலமைச்சர்

அறிஞர் அண்ணா

அவர்கள் தலைமையில்

திரைப்படக் கலைஞர்கள் அளிக்கும்

★ கலை விழா ★

இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் கலைஞர்கள்:

டி. கே. எஸ். சகோதரர்கள்	—	ஜெயலலிதா
எஸ். எஸ். இராசேந்திரன்	—	ஹேமா மாலினி
அசோகன் குழுவினர்		
'சோ'	—	மனோரமா
தங்கவேலு, டி. எஸ். பாலையா	—	எம். சரோஜா
எல். ஆர். நடராசன்	—	சந்திரகாந்தா
சிதம்பரநாத்	—	ஓமனா

திரை இசைத் திலகம் கே. வி. மகாதேவன் குழுவினரின்

மெல்லிசை

டி. எம். சௌந்தரராஜன்	—	பி. சுசீலா
ஏ. எல். ராகவன்	—	ஜமுனா ராணி

கட்டணம்: ரூ. 50, 25, 10, 5, 2.

காட்சி முடிந்தவுடன் பஸ் வசதி உண்டு.

டிக்கெட்டுகள் கிடைக்கும் இடம்:

27, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

பல்கலைக்கழகக் கலையரங்கில் அக். 3, 4-ந் தேதிகளில் காலை 9 மணி முதல் மாலை 7-மணி வரை டிக்கெட்டுகள் கிடைக்கும்.

மதுவை எதிர்த்து மௌன மறியல்!

போபால், அக். 4—

இந்தூர் நகரில் மதுக் கடைகள் முன்பு, அக். 8-ம் நாள் மௌனமாக மறியல் போராட்டம் நடத்த கஸ்தூரிபாய் ஆசிரம வாசிகள் முடிவு செய்துள்ளனர்.

அக். 8-ம் நாள் முதல் 14-ம் நாள்வரை மதுவிலக்கு வாரம் கடைபிடிக்கப்பட இருக்கிறது. மது அருந்தும் பழக்கத்தினால் விளையும் தீங்குகளை எடுத்துரைக்கப் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், சொற்பொழிவுகள் நடத்தப்படும்.

அதன்பின், எட்டாம் தேதியன்று மதுக் கடைகள் முன்பு 8 அல்லது 9 பேர் கொண்ட குழுவாக கஸ்தூரி பாய் ஆசிரமவாசிகள் மவுனமாக மறியல் போராட்டம் நடத்துவார்கள். அனாதைப் பெண்களின் நலனுக்காக கஸ்தூரி பாய் நினைவு நிதியிலிருந்து இந்த ஆசிரமம் நடத்தப் படுகிறது.

மொழிச் சார்பற்ற நாடாகுமா இந்தியா?

"ஒரு மொழிக்கு மட்டும் முதன்மையான இடம் தந்ததனால், பாகிஸ்தான், இலங்கை இரண்டும் பெரிய அளவு இழப்புக்கு ஆளாயின!

"ஒவ்வொரு நாட்டிற்கும் 'தனது' என்று ஒரு மதம் இருக்க வேண்டும்—என்று ஒரு காலத்தில் ஐரோப்பாவில் கருதப்பட்டு வந்தது. இதன் விளைவாக இலட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்!

"தன்னை ஒரு மதச் சார்பற்ற அரசு என்று அறிவித்துக் கொண்டதன் மூலம் அறிவுத் தெளிவுடன் செயல்பட்ட இந்தியா, மொழி விஷயத்திலும் வேற்றுமைக்கு இடம் தராத கொள்கையைக் கடைபிடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?"

என்று பிரிட்டானிய ஏடு 'கார்டியன்' எழுதியுள்ளது.

இந்திக்காரர்கட்கு 'விடுதலை'

"இந்தி பேசாதவர்களை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காக, இந்திய அரசு, பல்கலைக் கழகங்களில் மாநில மொழிகளைப் பயிற்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் மூலம் இந்திப் பகுதிகள் ஆங்கிலத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியும் என்பதற்காகவே அது இவ்விதம் செய்துள்ளது"

என்று பிரிட்டானிய ஏடு 'டைம்ஸ்' எழுதியுள்ளது.

பீரங்கி சுடும் பயிற்சி

சென்னை --இராயபுரம் பகுதி பீரங்கிப் படையினர், அக். 6, 7 ஆகிய தேதிகளில் கடலை நோக்கிச் சுடும் பயிற்சியை நடத்துவர். ஆண்டுதோறும் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

கதர் ஒரு கட்சிக்குச் சொந்தமானதல்ல!

கதரின் பெயரால் ஊழல் புரிவோர் கோட்சேயைவிடக் கொடியவர்கள்!

காந்தி பிறந்த நாள் நிகழ்ச்சியில் அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னை, அக். 3—

“கதர் என்பது ஒரு கட்சியின் சின்னமல்ல; காந்தியடிகள் உலகிற்கே சொந்தமானவர்—அவர் போற்றிவந்த கதர் எல்லோருக்கும் சொந்தம்!

“போலிக் கதர் விற்பனையைத் தடுக்கவேண்டும்; போலி நூலைக் கலந்து நெய்து, ‘கதர்’ என்று விற்பவர், காந்தீயத் தத்துவத்தையே கொன்றவர் ஆவர்!

“கதரின் பேரால் ஊழல் புரிவோர், காந்தியைச் சுட்ட கோட்சேயைவிடக் கொடியவர்கள் ஆவர்! அத்தகைய பேர்வழிகளை அரசுக்குக் காட்டிக்கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்”

என்று, அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள், காந்தி பிறந்த நாளில் இராஜாஜி மண்டபத்தில் கதர் விற்பனையைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கூறினர்.

கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் துணைத் தலைவர் திரு. பரமசிவம் எம்.எல்.ஏ. விழாவில் பங்கேற்றவர்களுக்குக் கதர்ப் பொன்னாடை போர்த்தினர்.

தோழர்கள் சா. கணேசன் எம்.சி., பத்மநாபன் (கதர்—கிராமக் கைத் தொழில் வாரியச் செயலாளர்) ஆகியோர் கலந்துகொண்டனர்; ஆதி நாராயணன் நன்றி கூறினர்.

அமைச்சர் முத்துச்சாமி

அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“பொதுத் தொண்டு—சமுதாய மறுமலர்ச்சிப் பணி ஆகியவற்றிற்காக உழைக்க முன்வருவோர், முதலில் தங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு தூய்மைப் படுத்திக்கொண்டு—சமுதாயத்துக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு சில உலக உத்தமர்களில் காந்தியாரும் ஒருவர்!

தனக்கென அவர் வாழவில்லை—இந்தத் தரணிக்காக அவர் வாழ்ந்தார்!

காந்தியாரை ஒரு சாதாரண அரசியல் கட்சிக்காரர் என்று சொல்வதற்கில்லை—கட்சிக்கு அப்பாற்பட்டவர் கட்சியைத் தனக்கொரு கருவியாகவே அவர் கருதி வந்திருக்கிருர்!

உலகமே வாழ வேண்டுமென்ற தத்துவத்தின் மொத்த உருவம் அவர்! உலகிலே இல்லாததை—ஆகாததை நீக்கிட வந்த பெரியார்!

அதிகாலையில் ஒவ்வொருவரும் எழுந்ததும், ‘பொது நன்மைக்கு நாம் என்ன செய்தோம்’ என்ற கேள்வியை எழுப்பிக்கொள்வோமானுல், உன்னதச் சிந்தையை அக்கேள்வி நம்மிடையே கிளறும்! இதுவே, காந்தியார் நினைவுக்கு நாம் செய்யக்கூடிய தக்க மரியாதை!

‘இந்த நாட்டில் பிறந்த அனைவரும் ஒரு குடிப் பிறந்த மக்கள்’ என்று கூறி, அதற்காகவே தம் இன்னுயிர் நீத்தவர் காந்தியார்!

சாதிகள் நீங்கிய ஒப்புயர்வற்றதோர் சமுதாயத்தை உருவாக்குவதில் நாம் எந்த அளவு வெற்றி பெற்றிருககிரேம்?

‘அரசியல் கட்சிக்காரர்களாகிய நாம், கொள்கை மோதலோடு நிற்கிரேமா? நமக்கிடையேயுள்ள இடைவெளி நாளுக்கு நாள் அதிகரிக்கிறதா? குறுகி வருகிறதா?—என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து, காந்தியார் மனம் அமைதியடைய நாம் ஒன்றுபட்டாக வேண்டும்!

நமக்குள்ளே கொள்கை மோதல்கள் இருப்பதில் தவறில்லை!

காந்தியார் எந்த ஒரு தனிக் கட்சிக்கும் சொந்தமானவர் அல்லர்! இதை உணர்ந்துதான் அறிஞர் அண்ணு அவர்கள், ‘காந்தியாரின் தத்துவம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்; எல்லோர் உள்ளத்திலும் பதிய வேண்டும்’ என்கிருர்!

அதேபோலக் கதரும், எல்லோருக்கும் சொந்தமானதே! அது ஒரு கட்சிக்கே சொந்தமென்ருல், அதைவிட அவர் நினைவுக்குச் செய்யும் துரோகம் வேறு இருக்க முடியாது! எனவே, கதரைப் பாதுகாப்போம்!

தெரிந்தோ, தெரியாமலோ இலட்சக் கணக்கானவர்கள் கதர்த் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள்! கைத்தறிக்கு உள்ள எல்லா நிலைமைகளும் இதற்கும் உண்டு!

“செய்யும் தொழிலனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால், நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை காண்” என்றனர் பெரியோர்!

ஆனுல் இதுவரை அந்த முழுமையான நிலையை எட்ட முடியாமல், நெய்யும் தொழில் இருந்துவருகிறது!

கதர்த் துறையில் ஊழல் நீக்கப்படவேண்டும்—குற்றம் குறைகள் அகற்றப்படவேண்டும்—போலித்தனம் போகவேண்டும்—இதற்குப் புதிய அரசு பாடுபடும்!

புதிய அரசு பொறுப்பேற்றவுடன், ‘கதர்த் தொழிலை அழித்துவிடுமோ’ என்ற தவருன எண்ணம் ஏற்பட்டது; ‘நாங்கள், இருக்கும் எதையும் அழிக்க வரவில்லை; புதிதாக ஏதும் உண்டாக்க இயலுமானுல் அதற்காகப் பாடுபடுவோம்’ என்று அறிஞர் அண்ணு அவர்கள் தெரிவித்தார்கள். அதையே இங்கு நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்! காந்தியாரின் தத்துவத்தை நிச்சயமாகச் செயல்படுத்துவோம்!

அதேபோது, எவரையும், ‘கதர் தான் அணியவேண்டும்’ என்று கட்டாயப்படுத்த மாட்டோம், கதரில் ஆர்வமும் ஊக்கமும் ஏற்படச் செய்வோம்.

கதரை, காலத்துக்கேற்ற புதுப் புது வண்ணங்களிலும் நயமானதாகவும், கண்ணுக்கும் கருத்துக்கும் ஏற்றதாகவும் செய்ய வேண்டும்.”

தமிழ்நாடு காங்கிரசு மேடைப் பேச்சாளருக்கு!

இரட்டை வேடம்!

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அரசின் பொறுப்பினை ஏற்ற பிறகு--தொலைதூர பஸ்களை நாட்டுடைமை ஆக்கும்வகையில்--புதுப்பிக்க வேண்டிய பஸ்களுக்கான லைசென்சுகளைப் புதுப்பிக்கவில்லை!

உடனே தமிழ்நாடு காங்கிரசுத் தோழர்கள், ஊரை அதப்படுத்திவிட்டார்களே! முதலாளிகளைத் தூண்டிவிட்டு என்னென்னவோ செய்தார்களே! ‘தமிழக அரசுக்கு அப்படிச் செய்ய ஏது உரிமை’ என்று மேடைகளில் ஆர்ப்பரித்தார்களே!

இதோ, ஒரு செய்தி வந்திருக்கிறது; அவர்கள் விமரிசனம் என்னவோ?—

“‘போத இன்சூரன்சுத் துறையை நாட்டுடைமை ஆக்குவதற்கு வசதியாக 1967 டிசம்பர் 31-க்குப் பிறகு ஆயுள் இன்சூரன்சு கார்ப்பரேஷனைத் தவிர மற்ற தனியார் இன்சூரன்சு கம்பெனிகளின் லைசென்சுகளைப் புதுப்பிப்பதில்லை என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது.”

இது, காங்கிரசு பொறுப்பேற்றுள்ள மத்திய அரசின் நடவடிக்கை; அதனுலே......

வழக்கம்போலப் போடுவார்களே----

இரட்டை வேடம்---அதுதானு? அல்லது......,

தமிழக அரசின் உணவுக் கொள்கைக்கு டெல்லியின் பாராட்டு

கூடுதலான கோதுமை ஒதுக்க கே.ஏ. மதியழகன் வற்புறுத்தல்

சென்னை, அக். 1—

உணவுத் தானியக் கொள்முதலும் ;விநியோகமும் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடைபெறுகின்றன என்று மத்திய அரசு பாராட்டியதாகத் தமிழக உணவமைச்சுர் திரு. மதியழகன் அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

“தமிழக அரசின் தனி உணவு மண்டலக் கொள்கையை மற்ற மாநிலங்களும் ஆதரித்தன. முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழக அரசின் இக்கருத்துக்குப் பெரும் ஆதரவு கிட்டியது.

‘தமிழகத்துக்குத் தரப்படும் கோதுமையின் அளவைக் கூட்ட வேண்டும்; அதற்கான மானிய உதவியையும் நீடிக்க வேண்டும்’ என்று மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளேன்.

1965—66-ம் ஆண்டில் வழங்கப்பட்ட கோதுமையின் அளவில் மூன்றில் ஒரு பகுதிதான் இப்போது தமிழகத்திற்கு வழங்கப்படுகிறது.”

‘ஆங்கிலத்தையும் தேசிய மொழியாக்குக’

அமைச்சர் நெடுஞ்செழியன் வற்புறுத்தல்

பெங்களூர், செப். 30—

“அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள தேசிய மொழிகளின் பட்டியலில் 16-வது மொழியாக ஆங்கிலத்தையும் சேர்க்க வேண்டும்”

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இங்கு தமிழ்ச் சங்கக் கட்டிட அடிக்கல் நாட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கா. வேழவேந்தன் உடல்நிலை

சென்னை, அக். 4—

சட்டமன்ற உறுப்பினர் கா. வேழவேந்தன் அவர்கள் கடுமையான காய்ச்சலால் உடல்நிலை பாதிக்கப்பட்டு, நேற்று மாலை ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிருர்.

ஒரு வார காலத்துக்கு எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளக்கூடாது என்று மருத்துவர்கள் கூறியிருப்பதால், அவர் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாத நிலையில் இருக்கிருர் என்று அறிவிக்கப்படுகிறது.

மணலி தமிழ்க் கல்லூரி

பேராசிரியர் திருநாவுக்கரசு முதல்வரானுர்

சென்னை நக்கீரர் கழகத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி கௌரவ விரிவுரையாளரும் சென்னை மாநிலக் கல்லூரி தமிழ்த் துணைப் பேராசிரியரும், மொழியியல்—வரலாறு—கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞருமான பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு எம்.ஏ. அவர்கள், மணலி தமிழ்க் கல்லூரியின் முதல்வராகப் பதவியேற்றமை குறித்து நக்கீரர் கழகம் தனது பாராட்டுதலை அவருக்கும், தமிழக அரசுக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னைச்சீரணியினருக்கு அழைப்பு

4-10-67

வடிகால் வெட்டும் பணியில் ஈடுபடுவர்

“சென்னை—வியாசர்பாடிப் பகுதி கல்யாணபுரத்தில் வடிகால் வெட்டும் பணியை 5—10—67 காலை 9 மணிக்கு அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் துவக்கிவைக்கிருர்கள்.

இப்பணியில் ஈடுபட விழைந்து பெயர் கொடுத்துள்ள சீரணித் தொண்டர்களும், ஏனையோரும் 5—10—67 காலை 8 மணிக்கே சட்டமன்ற உறுப்பினர்களின் பழைய விடுதிக்கு வந்து சேர வேண்டுகிறேன்; அங்கிருந்து அவர்கள் கல்யாணபுரத்திற்குச் செல்ல வண்டி வசதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கொண்டு இப்பணியில் ஈடுபட விரும்பும் தோழர்கள், கலந்துகொள்ளும் நாட்களைக் குறிப்பிட்டு, ‘சீரணித் தனி அதிகாரி, கோட்டை, சென்னை-9’ என்ற முகவரியில் கடித மூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

வடிகால் திட்டம் உருவாகும் கல்யாணபுரத்திற்கு, தங்கசாலையிலிருந்து 38; 38-ஏ; 57; 58; 58-ஏ; 59 ஆகிய பேருந்துகள் செல்கின்றன. எருக்கஞ்சேரி காவல் நிலையம் அருகில் இறங்க வேண்டும்”

என்று சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் நீலநாராயணன் அறிவிக்கிருர்.

நடக்க இருப்பவை

6--10--67

சிவகாசி

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பாவடித் தோப்பு திடல் அருகில்; தலைவர்: ஏ. துரைக்கண்ணன்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், எஸ். எஸ். தென்னரசு, எஸ் பி. மணியம், வெ. கருணுகரன், ரசாக்.

குழுக் கூட்டம்

கரூர் நகர தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் 6—10—67 காலை 10-மணிக்கு மேட்டுத்தெரு பூஞ்சோலை செட்டியார் சத்திரத்தில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. தலைமையில் நடைபெறும்.

முருகு பாண்டியன்

பலகுரல் கலை நிகழ்ச்சி

அக். 4: கீழசேவற்பட்டி; 5: புதுக்கோட்டை; 6: திருப்பத்தூர்; 7: சித்தையன்கோட்டை; 8: திண்டுக்கல்; 9: அய்யலூர்! 10: திண்டுக்கல்; 11: காசிப்பாளையம்; 12: கரூர் (நன்னியூர்); 13: திருச்சி; 14: பரங்கிப்பேட்டை; 15: நெய்வேலி; 16, 17, 18, 19: சென்னை; 23: அய்யம்பாளையம்: 24: நிலக்கோட்டை; 25, 26, 27: சேலம் மாவட்டம்; 29: ஈரோடு; 30: கவுந்தப்பாடி; 31: மொடக்குறிச்சி.

இந்திய இசை-- சீன நடனம்!

இசை, எதிரிகளையும் மயங்க வைக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, இந்திய—சீன எல்லைப் பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது!

நாதுலாவின் மறுபுறத்தில் இருக்கும் சீனப் படைகள், இந்தப் புறம் இருக்கும் இந்திய இராணுவத்தினரின் வானெலி இசைக்கு ஏற்பத் தங்களையும் அறியாமல் ஆடி மகிழ்கின்றனராம்!

ஆனுல், அவர்களுக்காகவே பீகிங் வானெலியில் ஒலிபரப்பப்படும் மா சே-துங் போதனைகள் வரும்போது, தங்கள் காதுகளை அடைத்துக் கொள்கின்றனர்!

தஞ்சையிலிருந்து நெல்லை ஏற்றிச் செல்ல தனி ஏற்பாடு

புதுடில்லி, அக். 1—

தஞ்சை மாவட்டத்தில் அறுவடையாகிற நெல்லைப் பல்வேறு மாவட்டங்களுக்கும் ஏற்றிச் செல்ல, கூடுதலான வாகின்கள் ஒதுக்க வேண்டும் என்று இரயில்வே அமைச்சர் பூனுச்சாவிடம் தாம் வற்புறுத்தியதாகவும், நாள் ஒன்றுக்கு 200 வாகின்கள் ஒதுக்கப்படும் என்று இரயில்வே அமைச்சர் தெரிவித்திருப்பதாகவும் அறிஞர் அண்ணு அவர்கள் தெரிவித்தார்கள்.

இரயில் வாகின் போக்குவரவுக்கான அட்டவணை ஒன்றை வகுத்து அனுப்புமாறு இரயில்வே அமைச்சர் கேட்டுக்கொண்டதாகவும் கூறினர்.

“தமிழ்நாட்டில் புதிய இருப்புப் பாதை அமைப்பதற்கான திட்டங்கள் பற்றிப் பேசினீர்களா?” என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, அண்ணு அளித்த பதில் வருமாறு:—

“நான் அவரைச் சந்தித்த நேரம், அசாமில் நடைபெற்ற இரயில் விபத்துக் குறித்து அவர் மனம் நொந்து இருந்தார்; எனவே, அவரிடம் அதிகமாக வலியுறுத்தவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, [illegible]